செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதிவருடம் (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத-அடு] யாழ்ப்பாணம்: விரோதிகிருது ஆண்டு பங்குனி மீ ௧௮ உ வெள்ளிக்கிழமை (31-3-1972) [இல-ருக

நேயர் நெஞ்சம்

# கதிர்காம புனித நகரத் திட்டம்

## மடங்களை அகற்றுவதற்கு ஆட்சேபம்

இலங்கைவாழ் சகல மக்களாலும் மற்றும் வெளிநாட்டவர்களாலும் சாதி, மத, பேதமின்றியும், இன மொழி வேறுபாடின்றியும், உயர்வு தாழ்வின்றியும் தூய மனப்பான்மையுடன் இறைவனை வழிபடும் இடம் கதிர்காம ஸ்தலம் ஒன்றேயாகும்.

இத்தலத்தில் இந்துக்களும் பௌத்தர்களும், இஸ்லாமியரும் மற்றும் ஏனைய மதத்தவர்களும் வழிபாடாற்றி, சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும், அன்பையும், நல்மனப்பான்மையையும் ஏற்படுத்தி மத இன மொழிப் பூசல்களையெல்லாம் களைந்தெறியுமிடமாக இத்தலம் விளங்குகின்றது. இத்தலத்துக்கு நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான யாத்திரீகர்கள் வழிபாட்டிற்காக வந்து செல்லுகின்றார்கள். அவர்கட்கு தங்குமிடத்தையும், உணவு வசதிகளையும், ஓய்வையும் அளிப்பதற்கு தர்மஸ்தாபனங்களாகிய மடங்களே உதவியாக இருக்கின்றன என்பது சகலரும் அறிந்தவிடயமாகும். இந்நிலையில் தற்சமயம் அமுலுக்கு வந்துள்ள புனிதநகர் திட்டத்தின்படி (18-2-72) வர்த்தமானி மடங்களும் தர்மஸ்தாபனங்களும் அகற்ற இருப்பதாக தெரிகின்றது.

இது விடயமாக மீண்டும் யோசனை செய்யும் வண்ணம் உங்களைத் தாழ்மையுடன் வேண்டுகின்றோம். ஏனெனில் நாட்டில் ஒற்றுமையையும், மொழி இன மதப்பூசல்களையும் அகற்றி பரஸ்பர நல்லெண்ணத்தையும் வளர்ப்பதற்கு இத்தர்மஸ்தாபனம் பெரிதும் மூல காரணமாக அமைந்துள்ளது என்பது கண்கூடு. மற்றும் மடங்களிலும் வழிபாட்டிற்குரிய ஆலயங்களே முக்கிய இடம் பெறுகின்றன. எனவே மடங்களும், கோவில்களும் சமானமாகவே அமைந்துள்ளன. புனித நகர்த்திட்டத்தின்படி மடங்களை அகற்றுவது கோவில்களை அகற்றுவதற்கு சமானமாகும். மேலும் அவசரகால நிலை பிரகடனம் உள்ள இவ்வேளையில் மடங்களை அகற்றுதல் இலங்கையின் அரசியல் அமைப்பில் காட்டப்பட்டுள்ள மத சுதந்திரத்தை அகௌரவப்படுத்துவதாகும். ஆகவே தாங்கள் இவ்விடயத்தை முன்னிட்டு மீண்டும் திரியோசனை செய்து முடிவுக்கு வருவது சிறந்ததாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற இடம் கதிர்காமம் ஒன்றே. இவ்வித சிறப்பு வாய்ந்த மடங்களை மிகக பக்தியும் கர்ம சுந்தையும், தெய்வ கடாக்ஷமும், தீர்க்க தர்சனமும நிறைந்த தவ சிரேஷ்டர்களே முன்னின்று ஏற்படுத்தியுள்ளார்கள். முற்காலத்தில் எதுவித வசதியும் அற்ற சூழ்நிலையில் பல்லாயிரக்கணக்கான பொருட்களை காட்டுக்கூடாக கொணர்வித்து மிகுந்த கஷ்டத்தினூடே இத்தர்ம ஸ்தாபனங்களை நிறுவி யாத்திரிகர்கட்கு உதவிபுரிந்து வந்தார்கள். இத்தகைய தர்மஸ்தாபனங்கள் இன்றும் தர்மத்தை நிலை நாட்டி வருவது கண்கூடு. எனவே இத்தகைய தர்மஸ்தாபனங்களை அப்புறப்படுத்தும் திட்டத்தை பல மதத் தலைவர்களையும் பெரியார்களையும் கலந்தாலோசித்து ஆராய்ந்து முடிவு செய்வதே சமயம் பாதுகாப்பிற்குக் கொடுக்கும் கௌரவமாகும்.

கதிர்காமம் கிறீஸ்துவுக்குப் பல்லாண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் நிறுவப்பெற்றதென்பது சரித்திரம் கூறும் உண்மை. அத்தோடு அக்காலத்திலேயே மத, இன, மொழி வேறுபாடின்றி பல சமூகத்தவரும் வழிபாடாற்றினர் என்பதை மகாவம்சம் தெற்றென தெரியவைக்கின்றது. இவ்விதம் பலவித கலாசாரத்தையும் பல இன மொழி மக்களும் பரிவர்த்தனை செய்யும் இடமாக அமைந்ததால் நாகரீகம் வளர்ச்சியடைய இத்தர்ம ஸ்தாபனங்கள் பெரிதும் உதவின என்பது வெள்ளிடைமலை.

கலாசாரத்தையும் மத, மொழி ஆராய்ச்சியையும் வளர்க்கும் தர்மஸ்தாபனங்களை அப்புறப்படுத்தும் விடயத்தை தீரயோசித்துச்செய்ய ஏற்படும் காலதாமதத்தால் எதுவித குறையுமில்லை.

இத்தலத்தில் அநேக மதத் தலைவர்களும் பெரியார்களும் இறைவனை வழிபாடு செய்தனர். இத்தகைய பெரியார்களில் சிலர் தெய்வ சக்தியாலும், தர்மவான்களின் உதவியுடனும் தர்மஸ்தாபனங்களை ஏற்படுத்தி நாட்டின் பாதுகாப்பிற்கும் பொருளாதார சுபீட்சத்திற்கும் தெய்வ கிருபையை பெற்றார்கள். இத்தகைய பெரியார்களாலேயே நாட்டில் நீர்வளம், நிலவளம், சகோதரத்துவம் சிறந்து விளங்கியது.

இலங்கையை ஆட்சிபுரிந்த அரசர்கள் பலர் தமது ஆட்சிக்காலத்தில் நாட்டில் பொருளாதார அரசாட்சியில் இடையூறு ஏற்படாது தடுப்பதற்காக பூசை வழிபாடுகளை இப்புனித தலத்தில் தான் செய்தார்கள் என்பது சரித்திர உண்மையாகும்.

மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் பொருந்திய கதிர்காமத்தில் உள்ள தர்ம ஸ்தாபனங்களை அகற்றும் விடயத்தை தாங்கள் தீர ஆலோசித்து ஓர் குழுவை நியமித்து பல இன, மதத் தலைவர்களையும், தர்மஸ்தாபனங்களின் நிர்வாகஸ்தர்களையும் கூட்டி கருத்துக்களை அறிந்து முடிவுக்கு வருவதே சாலச் சிறந்ததாகும். தாங்கள் ஜனநாயகத்திற்கும், மத வழிபாட்டு சுதந்திரத்திற்கும் கொடுக்கும் கௌரவமாகும். பன்முறை கதிர்காமம் சென்று மடத்தொண்டில் ஈடுபட்டவர் என்ற முறையில் பேற்றடியார்களை கருத்தில் எடுத்து மடங்களை அப்புறப்படுத்துவதை தீர ஆலோசித்து செய்யும் வண்ணம் தங்கள் அரசாங்கத்திற்கு ஓர் வேண்டுகோளை கதிர்காம முருகன் பெயரால் தாழ்மையாக சமர்ப்பிக்கின்றோம்.

க. குமாரசுவாமி
கௌரவ செயலாளர்,
ஸ்ரீ சடையம்மா மடசபை,
24-3-72

---

உ
திருச்சிற்றம்பலம்

கோணிலா வாளி யஞ்சேன்
கூற்றுவன் சீற்ற மஞ்சேன்
நீணிலா அணியி னானை
நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர
வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே

திருச்சிற்றம்பலம்
— மாணிக்கவாசகசுவாமிகள்

---

## திருவிளையாடற் புராணம் பூர்த்திப் படிப்பு

பரசிவம்.

பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப் போத வின்ப
மாவண்ண மெய்கொண் டவன்றன் வலி யாணை தாங்கி
மூவண்ண றன்சந் நிதிமுத்தொழில் செய்ய வாளா
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம்.

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வருகின்ற திருவிளையாடற் புராணபடனத்தின் பூர்த்தி 10-4-72 திங்கட்கிழமை இரவு 6 மணிக்கு விசேட பூசைகளுடன் நிகழும். அன்று படிக்கப்பெறுவது அர்ச்சனைப் படலம். பல அறிஞர்கள் படிப்பில் கலந்து கொள்ளுவார்கள்.

சைவாபிமானிகள் சமுகமளிப்பார்களாக.

வை. இரகுநாதமுதலியார்,
காரியதரிசி,

மு. மயில்வாகனம்,
சமயப் பிரசார அமைச்சர்

சைவ பரிபாலனசபை, யாழ்ப்பாணம். 30-3-72.

---

சைவ நற்சிந்தனை (1)

## எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்

[23-3-72-இல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பெற்றது
[திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள்]

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தைப் படிக்கும்பொழுது அவர்கள் ஆத்மீக யாத்திரையில் படிப்படியாக முன்னேறியதைக் காணக்கூடியதாக விருக்கிறது. அவர்கள் பல பிறவிகள் எடுத்திளைத்ததும், மானிடப் பிறவியை எடுத்தபோது பல இன்னல்களிலிருந்து தப்பியதும் உலகப்பற்றுக்களில் சிக்கிக் கொள்ளாமல் தப்பியதும், சமய வாழ்க்கையில் ஈடுபட்டபோது பல தடைகள் ஏற்பட்டதும், அத்தடைகளைப் பொருள் படுத்தாது ஆத்மீக வாழ்க்கையில் முன்னேறியதும், ஈற்றில் திருவருள் கிட்டியதும் விரிவாகவும் தெளிவாகவும் கூறப்பட்டிருக்கிறது.

உயிர்கள் அவற்றின் வினைப் பயனுக்கேற்ப பல பிறவிகளை யெடுத்துழல்கின்றன. அவற்றை நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதமெனச் சாத்திரங்கள் கூறுகின்றன. மேலும் அவற்றைத் தாவரசங்கமமெனக் கூறுவதுமுண்டு. மாணிக்கவாசக சுவாமிகள் தாம்

வளர்ச்சி 2-ம் பக்கம்

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

## எங்கள் அறிவித்தல்

சைவப்பிரகாச அச்சியர்திரசாலை, இந்துசாதனம் காரியாலயம் இரண்டிலும் கடமையாற்றுவோர்க்கு 12-4-72 தொடக்கம் 17-4-72 வரை புதிய வருஷத்துக்காக விடுமுறை தினங்களாகும். 14-4-72 இல் தமிழ், ஆங்கில பத்திரிகைளும் வெளிவரமாட்டா கருமாரம்பம் 17-4-72 திங்கட்கிழமை முறபகல் 9-15 மணிக்கு ஆரம்பமாகும்.

—அதிபர்


THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

விரோதிகிருது ஸு பங்குனி மீ கஅ-உ வெள்ளிக்கிழமை [1972


# நூற்றூண்டு விழா

கொழும்புத்துறை யோகர் சுவாமிகளுடைய நூற்றூண்டு ஜயந்தி விழா வருகிற 6—6—72 அன்று கொண்டாடப்பெறும் ஒரு நாட்டில் மக்களை நல்வழிப்படுத்துவதற்குக் காலத்துக்குக்காலம் ரிஷிகளும், ஞானிகளுந் தோற்றுவார்கள். அந்த வகையில் தோன்றிய ஒரு பெரியார் தான் எங்கள் யோகர் சுவாமிகள். அவருடைய சீடர்களும் அவருடன் நன்கு பழகினவர்களும் அறிவார்கள். கிட்டதட்ட நாற்பது வருடங்களுக்குமுன் யோகர் சுவாமிகள் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலடியில் புராண படனம் நடத்திவந்த காலத்தில் வட்டுக்கோட்டை ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண ஞானசம்பந்தசுவாமிகள் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து வண்ணார்பண்ணையில் தங்கியிருந்த காலத்தில் யோகர் சுவாமிகள் நடத்திய கந்தபுராண படனத்தில் பங்குபற்றிப் பிரசங்கஞ் செய்தனர் யோகர் சுவாமிகளுடைய தவநிலையை மெச்சினர். "யோகர் சுவாமிகளிடத்தில் காஷாயம், உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களில்லை. ஆனல், நீதவான்மார் வைத்தியர்கள், வழக்கறிஞர்கள் பண்டிதர்கள், புலவர்கள், அவருக்கு மரியாதை செலுத்துகின்றார்கள், அப்பெருமைக்குக் காரணம் அவரிடத்திலுள்ள நிராசையும், கடவுள் பக்தியுமே என்று கூறினர். கற்றாரைக் கற்றாரே தாமறிவார், ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண ஞானசம்பந்த சுவாமிகள் எவ்வளவு சுருக்கமான வாக்கியத்தில் யோகர் சுவாமிகளுடைய பெருமையை அளந்து விளக்கியுள்ளாரென்பதை அறிவோமாக.

யோகர் சுவாமிகள் தாம் பெற்ற இன்பத்தைப் உலகமெல்லாம் பெறுக என்ற பெரிய நோக்கத்தோடு வாழ்ந்தவர் அவருடைய பெருமை அளப்பரியது யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர்கள் மாத்திரமல்ல, சைவசமயிகள் மாத்திரமல்ல, இலங்கையிலுள்ள எல்லாச் சாதி, சமயத்தினரும், பிறநாடுகளிலுள்ளவர்களும் அவருடைய ஞானேபதேசத்தையும் அருளையும் பெற்று உய்திபெற்றிருக்கின்றார்கள். சிறுகுழந்தைகள் முதல் முதியோர்கள் வரை, புத்தி குறைந்தவர்கள் முதல் மிகுந்த புத்திமான்கள் வரையிலுள்ளவர்கள் யாவருக்கும் அவரவர்களுடைய இரங்கும் சக்திக்கேற்பச் சிறந்த உவமான உபமயங்கள் மூலம் இலகுவான பாஷையில் அவர்களுக்கு புத்திகூறி அவர்களுடைய அகவிருளை ஓட்டுவார்.

மக்கள் நற்சிந்தனையுடையவர்களாய் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் 'சிவதொண்டன்' என்ற சமயச் சஞ்சிகையை வெளியிடச் செய்தார். அவர் இறைவன் மீது பாடிய பாடல்கள் எல்லாம் சிவதொண்டனில் காலத்துக்காலம் வெளிவந்தன. அவையெல்லாம் திரட்டப் பெற்று 'நற்சிந்தனை' என்னும் நூலாக வெளிவந்துள்ளது.

அப்பெருமானுடைய விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற வேண்டும். அவர்களுடைய கருத்துக்களையும், தவத்தின் பெருமையையும் அவரையறியாத சந்ததியார் அறியவைத்தல் வேண்டும். அப்பொழுது அவர்கள் அவருடைய உபதேசங்களை அறிந்து தவவாழ்க்கையை நடத்துவார்கள்.

இப்பொழுது நம்நாடுபடுகின்ற துன்பங்களைப்போக்கத் தவமே வேண்டும்.

> இவர்பல ராகிய காரண நோற்பார்
> சிலர்பலர் நோலா தார்,

உலகத்தில் செல்வர்கள் சிலராகக் காணப்படுகின்றார்கள், வறியவர்கள் பலராகவுள்ளார்கள். அதற்குக் காரணம் தவஞ்செய்வார் சிலர், தவஞ்செய்யாதார் பலராகவுள்ளனர். தவமே வேண்டத்தக்கது.

யோகர் சுவாமிகள் திருவடிகள் வாழ்க.

# சிதம்பரக்ஷேத்திரத்தின்

## பெருமையை விளக்கிய பெரியார்

ஞானப்பிரகாச முனிவருக்குப் பெற்றார்கள் 'ஞானப்பிரகாசர்' என்ற திருநாமத்தைச் சூட்டினார்கள். அது எவ்வளவு பொருத்தமாக அமைந்தது எதிர்காலத்தில் ஞானத்தைப் பிரகாசஞ் செய்தற்குரியவர் என்ற குறிப்பு அமையக்கூடியதாக அவருடைய திருநாமம் அமைந்தது ஞானப்பிரகாச முனிவர் சிதம்பர க்ஷேத்திரத்தினுடைய பெருமையை உலகு அறியும்படி தவஞ் செய்தனர். சிவகாமசுந்தரியம்மையாருடைய அனுக்கிரகத்தைப் பெற்று ஞானநூல்களைக்கற்று ஞானநூல்களை எழுதினர். ஞானப்பிரகாசம் என்ற குருகுளத்தைத் தோண்டி படித்துறைகள் அமைத்து அடியார்கள் ஸ்நானஞ்செய்யவும் சாதிராவந்தனமுதலிய கிரியைகளைப்புரியவும் உதவினர். சிவஞான சித்தியாருக்கு அரிய உரை எழுதினர்.

> ஒழுக்கமன் பருளா சார முபசார முறவு சீலம்
> வழுக்கிலாத் தவந்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
> யழுக்கிலாத் துறவடக்க மறிவொடர்ச் சித்தலாதி
> யிழுக்கிலா வறங்க ளானல் யிரங்குவான பணியறங்கள்

ஒழுக்கமுடைமை யாவர்மாட்டு மன்புடைமை கருணையுடைமை வேதாகமங்கள் விதித்தபடி ஆசாரங்களை அநுட்டித்தல் உபசாரப்புடைமை, யாவர்மாட்டுங்கலப்புடைமை, நற்குணமுடைமை, தவமுடைமை, வழிபடுதல், தானங்கள், தம்மின் மூததோரை வந்தித்தல், வணங்குதல் வாய்மையுடைமை, குற்றமற்ற துறவு தீநெறிக்கட்செலாமை பகுத்தறிதல், அர்ச்சித்தல் ஆகியவை குற்றமில்லா அறங்களாகும் இவை ஒருவனிடத்தில் உளவாயின் இரங்குவானது பணி அறமாய் முடியும். இங்கு கூறிய அறங்களை அநுட்டித்து உலகுக்கு மெய்ந்நெறி காட்டிய பெரியார் ஞானப்பிரகாசமுனிவர்,

இற்றைக்கு 390 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அவதரித்த இம்முனிவரை நம்மவர்கள் நினைவுகூருதல் வேண்டும். நாம் நற்கதிபெற இச்சீலரது தவவாழ்க்கையைச் சிந்திக்கவேண்டும். அவர் போற்றிய பசுக்காத்தல் என்னும் அறம் நாட்டில் பரவச் செய்ய வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நவர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற ஞானப்பிரகாச முனிவர் குருபூசை விழாவில் சைவப் புலவர்மணி த. குமாரசுவாமிப்புலவர் விரிவுரை நிகழ்த்துகையபோது குறிப்பிட்டார்கள்.

## தாமோதரம்பிள்ளைக்குப் பின்னர்

# தம்பையாப் பண்டிதர்

"பண்டிதமணி என்றால் அப்பெயர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையே குறிக்கும். அதுபோல் பண்டிதர் என்றால் எமது நாட்டில் பண்டிதர்கள் இருந்தாலும் அப்பெயர் சிறப்பிட்டிப் பண்டிதர் திரு. சி. கா தம்பையா அவர்களையே குறிக்கும். உலக வரலாற்றில தமிழுக்குப் புத்துயிரளித்த பெரியார் தமிழ் தந்த தாமோதரம்பிள்ளையை ஈன்றெடுத்த பெருமை சிறுப்பிட்டிக்குரியது. திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் வரிசையில், அவர்களுக்குப் பின் சிறுப்பிட்டி ஈன்றெடுத்த நற்புதல்வரே எமது பெருமதிப்புக்குப் பாத்திரரான பண்டிதர் சி. கா. தம்பையா அவர்கள் இந்த நாட்டில் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் குறைவறச் செய்த ஓர் உத்தம புருஷராவர். அவர்கள் வாழ்ந்த காலம் அறுபது ஆண்டுகள் தான். அவர்கள் செய்த நற்பணிகளோ அநேகம். அவரது தூயவழியைப் பின்பற்றி வாழ்தலே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும்."

ஆசிரியர் சங்கப் பிரமுகரும், மீசாலை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் முன்னாள் அதிபருமான பண்டிதர் சி. கா. தம்பையா அவர்களது மறைவையொட்டிச் சிறுப்பிட்டியில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியில் பேசிய வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பண்டிதர் செ. துரைசிங்கம் பேசுகையில் "நல்ல நண்பனாய், நல்லாசிரியனாய், நாட்டுக்கு நல்ல வழிகாட்டியாய் வாழ்ந்தவரான பண்டிதர் சி. கா தம்பையாவின் ஒழுகலாறுகள் உன்னதமானவை. அடக்கமான போக்கினால் யாரையும் வசிகரித்து அவர்களுக்கு ஏற்ற விதமான நன்மைகளைப் புரிவதில் பண்டிதர் சி கா. தம்பையா அவர்களுக்கு ஈடானவர்கள் இவ்வுலகில் யாருமே இல்லை" என்றார்.

ஆசிரியர் ஏ. பி. செல்லையா உட்படப் பலர் பண்டிதர் சி. கா தம்பையா அவர்களின் சேவை குறித்து அஞ்சலி உரை நிகழ்த்தினர்கள்.

## எல்லாப்பிறப்பும்......

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

பிறந்திளைத்த பிறவிகளைப் பின்வருமாறு கூறுகின்றார்கள்.

> புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்

இவ்விடத்தில் டார்வினுடைய கொள்கைக்கும் நமது


அணிந்துரை
அரங்கம்


## பரிதாபி வருஷ வாக்கிய பஞ்சாங்கம்

கணித்தவர்: கொக்குவில்
செ. இராசதுரை சோதிடர்.

ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தில் பதிக்கப் பெற்றது

விலை ரூபா. 2-00

வாரம் திதி. நக்ஷத்திரம், யோகம்; கரணம் ஆகிய ஐந்து றுப்புகளுடைய காலம் ஒவ்வொரு தினத்திற்கும் தரப்பட்டிருக்கின்றன,

விவசாயம கல்வி வியாபாரம் முதலியவை சம்பந்தமான கடமைகள் ஆரம்பிப்பதற்குரிய சுப நேரம், தேவாலய மஹோற்சவாதிகள் மனைசப் பொருத்தம் முதலிய விபரங்களும், விடுமுறை நாட்களும் கிரகசாரபலன முறையாகப் பிரசுரஞ் செய்யப்பெற்றுள்ளன.

சுத்தமானபதிப்பு ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டிய நூல்.

—0—

## குளிர்ச்சியபிடேகம்

ஏழாலை மத்தி, துவரைக் கலட்டி, வற்றுப்பளை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த குளிர்ச்சி அபிடேகம் எதிர்வரும் பங்குனி மாதம் 28ம் திகதி (10-4-72) கடைசித் திங்கட்கிழமை நடைபெறும்.

இக் குளிர்ச்சி விழாவை முன்னிட்டு முதல் நாளாகிய 9-4-72 ஞாயிற்றுக்கிழமை இரவு அம்பிகைக்கு நிகழவிருக்கும் அபிஷேக ஆராதனைகளுக்கு அன்று பகலே அபிஷேகத் திரவியங்களையுதவியும். இரவு முழுவதும் நிகழவிருக்கும் அபிஷேக ஆராதனைகளிலும், அடுத்தநாள் நிகழவிருக்கும் குளிர்ச்சி, தீக்குளித்தல் அன்னதானம் முதலிய வைபவங்களில் கலந்துகொண்டும் அம்பாளின் இன்னருளைப் பெற்று இன்புறுமபடி அடியார்களை வேண்டிக்கொள்ளுகின்றார்கள்.

## சிவபெருமான் விருத்த......

3-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

தைப்பார்த்துத் தெருவிலே நின்று துக்கப் படுகிறவள் மனமே கோயிலாக வாசஞ் செய்கிற மதுரேசனை பதைதிலே தியானித்துக் கெளரியின் திருமந்திரத்தைச் செபிக்குமளவில் அழுதபிள்ளையை விடைமேலழைக்கை ஆகாயத்திலே தோன்றக் கண்டு பின்னும் அக்கடவுளிடப்பாகத் தமர்ந்த தேவி திருமந்திரத்தை உச்சரிக்கின்றவளைப் தேவி வடிவாகச் செய்து விடைமேலேற்றிக் கொண்டு ஆகாய மார்க்கத்திலே தேவர்கள் பூமழை பொழியச் சொக்கநாதரெழுந்தருளினர். அதுகண்டு உலகத்தோரெல்லாருஞ் அதிக ஆச்சரியமடைந்து கொண்டாடினர்கள்.

சாத்திரங்கள் உயிர்களின் தோற்றத்தைப் பற்றிக் கூறுவதற்குள்ள விதத்தியாசத்தைக் கவனித்தல் அவசி

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

# சிவச்செல்வி இந்துசமய மன்றப் போட்டி முடிவுகள்

சித்தன்கேணி சிவச்செல்வி இந்துசமய மன்றத்தினர் கடந்த 10-3-72ல் நடாத்திய யாழ் மாவட்ட தேவார, திருக்குறள், திருவருட்பயன் மனன எழுத்துப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

**தேவாரம்:**

1. பரிசு: புனிதவதி பேரின்பநாயகம், 2ம் பரிசு: செல்வமணி சண்முகம் 3ம் பரிசு: இரஞ்சனி குமாரசாமி, ஆறுதற் பரிசுகள்: 1. தேவகி மயில்வாகனம், 2. பாமினி மயில்வாகனம், 3. ஹேமவதனி கர்கசாமி, 4. சகுந்தலா மார்க்கண்டு 5 நிமலேந்திரன் சுப்பிரமணியம், 6. மாலா கந்தையா, 7. செந்தூர்ச்செல்வி ஆனந்தகுமாரசாமி

**திருக்குறள்:**

1ம பரிசு: ச. கிருணாகரன், 2ம் பரிசு: பத்மவாதி முருகேசு, 3ம் பரிசு: இந்திராணி மாணிக்கம், ஆறுதற் பரிசுகள்: 1. இராசமணி கம்பு 2 த கருணாகரன், 3 சிவசங்கரி தெட்சணாமூர்த்தி, 4. சந்திரவதனா தில்லைநடராசா, 5. ஜெயராணி நடராசா, 6. இரத்தினேஸ்வரி தவசி; 7. காந்தவதனி கந்தசாமி

**திருவருட்பயன்:**

1ம் பரிசு: இராணி அரியபுத்திரர், 2ம் பரிசு: புவனேஸ்வரி அப்புத்துரை, 3ம் பரிசு: கமலாம்பிகை செல்லத்துரை, கமலராணி செல்லையா, ஆறுதற் பரிசு: 1. சந்திராதேவி குட்டித்தம்பி 2 நாகேஸ்வரன் கனகசபாபதி 3. சிவஞானரஞ்சிதம் துரைசிங்கம், 4 லீலாவதி காசிலிங்கம், 5. குலமணி அப்புத்துரை, 6. பட்டுரோஜா சங்கரப்பிள்ளை, 7. பத்மாவதி சுந்தரம்.

[இப்போட்டிக்குரிய பரிசில்களை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் வழங்கினார்கள் இப்பரிசுகள் 25-3-72ல் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் கலைவிழாவில் வழங்கப்பெற்றது ]

# இளைஞர்களின் (மாணவர்களின்) அமைதியின்மை

21-3-71 அன்று நடைபெற்ற யாழ்ப்பாணம் உளவியல் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு. என். சபாரத்தினம் 'மாணவர்களின் அமைதியின்மை' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்தினார்.

மன்றத்தின் தலைவர் திரு கே. பூரணபிள்ளை கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு சபாரத்தினம் கூறியதாவது:

'முற்கால இளைஞர்களை விட இன்றைய இளைஞர்களிடம் புதிய அமைதியின்மையும் பழங்காலப் பாசாங்குகளைப் பற்றிய பொறுமையின்மையும் காணப்படுகின்றன. ஆனாலும் முன்னைய இளைஞர்களை விட இன்றைய இளைஞர்கள் நேர்மையைக் கூடுதலாக நாடுகின்றனர்' என்று யேல் பல்கலைக் கழக உளவியற் பேராசிரியர் கெனெத் கெனிஸ்டன் கூறியுள்ளார்.

பல நாடுகளிலும் மக்கள் பலசமூகமாற்றங்களிடையே வாழுகின்றனர். கற்ற இளைஞர்கள் தங்களை மறைந்த (இறந்த) உலகத்துக்கும் இனித் தோன்றவிருக்கும் வல்லமையற்ற உலகத்துக்கும் இடையே உள்ள ஒரு சந்ததியாகக் கருதுகின்றனர்.

இப்பொழுது நடைமுறையிலுள்ள கல்விமுறைகள் அவர்களுக்கேற்ற பயிற்சி அளிக்கவில்லை. கல்வி ஓர் இளைஞனை முழுமனிதனாக்குவதற்குப் பயன்படாமல் வெறும் வயிறு வளர்ப்பதற்கு உதவும் சாதனமாகக் கருதப்படுகிறது. ஆக்க வழிகளில் இளைஞர்களின் ஆற்றல் உபயோகிக்கப்படாமற் போகின்றது'. கூட்டத்தின் முடிவில் மன்றச் செயலாளர் திரு எஸ் குமாரசாமி நன்றியுரை கூறினார். ——

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவ மலர் வெளியீட்டு விழா

29-3-72 புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய மண்டப முன்றிலில் இரவு 10மணியளவில், தலைவர் திரு இ. யோகநாதன் அவர்கள் தலைமையில் விழா ஆரம்பமானது தலைமையுரையின் பின் மலர் முதற்பிரதியை திரு எஸ். வீ. தாமோதரம்பிள்ளை பெற்றுக் கொண்டார்கள். பாராளுமன்ற உறுப்பினர் சிவமணி, வீ. ஆனந்தசங்கரி அவர்கள் சிறப்புச் சொற்பொழிவில் தான் நாகதம்பிரானுடைய அருளினால் கிராமசபைத் தலைவராகவும், பட்டினசபைத் தலைவராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் வந்ததாகவும் அவருடைய திருவருளே தனக்கு உதவிபுரிந்ததெனவும் நாகதம்பிரான் பெருமையை எவராலும் அளவிட்டறிய முடியாதென்று கூறினார்கள்.

மலர் வெளியிடுவதில் உள்ள சிரமங்களைப் பொருட்படுத்தாது சிறந்த

இம் மலரை வெளியிடும் பொறுப்பையேற்ற திரு. வே. கந்தசாமி (விவேகானந்த அச்சக முதல்வர்) அவர்கள் சிறப்பாகப் பாராட்டப்பெற்றார். ஆலய பரிபாலன சபையார் அவரைக் கௌரவித்து 'சைவப்புரவலர்' என்ற பட்டத்தையும் வழங்கி, பொன்னாடை போர்த்திப் பாராட்டுரைகளும் வழங்கினார்கள். வித்துவான் மூ. சபாரத்தினமவர்கள் திரு வே. கந்தசாமி அவர்கள் செய்துவரும் சமயத்தொண்டுகள், ஆலயப் பணிகள் என்பனவற்றை தெளிவுபடுத்திப் பேசி அவர்களைச் சைவப்புரவலர் என்று சிறப்பிக்க வேண்டிய அவசியத்தையும், பொன்னாடை போர்க்க வேண்டியதன் காரணங்களையும் பலவுதுகள் காட்டி விளக்கினார்கள்

தலைவர் ஆர். ரீ. சுப்பிரமணியம் அவர்களும், காரியதரிசி திரு. சி சின்னத்தம்பி அவர்களும் பாராட்டிப் பேசினார்கள்.

திரு வே. கந்தசாமி அவர்கள் தமக்களிக்கப்பட்ட கௌரவத்துக்குச் சிறந்த முறையில் நன்றி தெரிவித்தார்கள் தொண்டர்கள் மிக விருப்புடன் போட்டி போட்டு மலர்களைப் பெற்றுக் கொண்டனர். ஆலயத்திற்கு சிரமதான முறையில் தெருவீதியை அமைத்த தொண்டர்களுக்கும், ஆலயத்திற்கு மக்கள் வந்து சேர்வதற்கு போக்குவரத்து பஸ் சேவையை நல்ல முறையில் ஒழுங்குசெய்த இ போ. ச அதிகாரிகளுக்கும் அமைதியை நிலைநாட்டி ஆலய உற்சவத்தை சிறப்பாக அசம்பாவிதங்கள் இல்லாமல் நடைபெறாது காப்பளித்த பொலிஸ் பகுதியினருக்கும் நன்றிதெரிவித்தனர். ——

## ஈழம் வருகிறார்

சுவாமி சாந்தானந்தா அவர்கள் ஈழம் வரவிருக்கிறார்கள். ஏப்ரல் 10ம் தேதி முதல் இவரது சாற்பொழிவு நல்லூர் தவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெறும்.

## சுக வாழ்வுக்குப் பிரசாரம் நடக்குமாம்!



பக்தர்: "ஏப்ரல் மாதம் முழுவதையும் உலக இருதயமாதமாக அநுட்டிக்க உலக சுகாதார ஸ்தாபனம் தீர்மானித்துள்ளதாம்! 'உங்கள் இருதயமே உங்கள் சுகவாழ்வு' என்பதே 1972-ஆம் ஆண்டின் பிரசார நோக்கமாம்! சகல சாதனங்களையும் பயன்படுத்தி பிரசாரம் நடைபெறப் போகுது......?'

சித்தர்: "தங்களுக்கு இருதயம் என்றொன்று இருக்குதுஎன்கிற நினைப்பில்லாதவங்க எத்தனை பேர் நடமுறை... இருக்கிறாங்க தெரியுமா? என்னையா வாழ்க்கை வாழ்க்கை என்ற மண்டையை உடைப்பதா என்பார்கள் 'கண்டதேகா சி - கொண்டதே கோலம்' என்றவகையில் தபனர்சாட்சியைக்கொன்ற வாபவர்களின் இருதயத்தைச் சுவாழ்வில நிலைக்கச்செய்யும்விதமாக இப்பிரசாரம் அமைந்தால்?

"நாயன்மார் - நாகன்"

# சிவபெருமான் விருத்த குமார பாலரானது

[பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம் தும்பைநகர், பருத்தித்துறை.]

(முன் வளர்ச்சி -2)

அப்படிக் கிடக்கின்ற சோமசுந்தரக் கடவுளாகிய பிள்ளையைக் கண்டு மாமியானவள் இப்பிள்ளை ஏதென்று கௌரியைக் கேட்க, அவள் அம்மே தேவதத்தன் தன் மனைவியோடும் இங்கேவந்து கொஞ்சநேரம் இந்தப் பிள்ளையைப் பார்த்துக் கொள்ளென்று போயினரென்று சொல்லுமுன்னே மாமியானவள் கண்கள் சிவந்து சீறி எலும்புகளை யணிந்து கொண்டு சுடுகாட்டில் திரிகின்றவனிடத்தில் அன்பு செலுத்துவனது பிள்ளையை நீ வைத்திருத்தலால் எங்கட்கு நீ ஆகாத ஆசாரமுடையவள், இனி இந்தப் பிள்ளையை எடுத்துக் கொண்டு வெளியே போவென்று துரத்தி விட்டாள். அப்போது கௌரி தாயில்லாத பிள்ளை முகத்

வளர்ச்சி 2-ம் பக்கம்

# திருக்குறள் THE GREAT KURAL

## பொருட்பால்

[யாழ்ப்பாணத்து, நல்லூர் சிவபக்தமாமணி திரு ச சூரசங்காரன் LLB (Lond) நியாயதுரந்தரர், அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள உரைத்தொகை' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. — ஆசிரியர்.

**அதிகாரம் 86 புல்லறிவாண்மை - Conceitad Folly**
**குறள் 847 (முற்றோடர் — 12)**

**அருமறை சோரு மறிவிலான் செய்யும்**
**பெருமிறை தானே தனக்கு**

1. வெளியிடக் கூடாத இரகசியத்தை மனதில் வைத்துக் காக்காமல் சோாந்து வெளியிடும் புல்லறிவாளன தானே தனக்கு மிகுந்த துன்பத்தை வருவித்துக் கொள்ளுவான.

1. The stupid who does not keep to himielf a secret which ought uot to be divulged, will bring down great Calamities on his own head.

2. புல்லறிவாளன தான் அரிதாக அறிந்த மறைப்பொருளைச் சோரவிடுவன; அதுவேயன்றித் தனக்குத் தானே பெருந் துன்பத்தினை செய்துகொள்ளுவான.

2. The arrogant fool will not keep to himself a a secret he had come to know of by great effrot besides he would thereby bring down great Calamities on his own head.

3. பெறுதற்கரிய உபதேசங்களைப் பெற்றும் அவற்றைக் கடைபபிடியாது சோரவிடும் புல்லறிவாளன தனக்குத் தானே பெரும் துன்பம வருவித்துக் கொள்வான.

3. Tne stupid who does not follow precions teachings learnt by him brings on himself great Calamities.

4. புல்லறிவாளன் அருமையான மெய்யறிவுப் போதனைகளைக் கைக்கொள்ளாது விட்டுவிடுவான. தன அறிவே உயர்ந்ததென்று தானே தனக்குப் பெருமை செய்துகொள்ளுவான.

4. The stupid who does not follow precio s teachings of great men. He will on the other hand, take pride in the thought tnat he him seef in possesed of grate Knowledge.

5. அரிய உபதேசப் பொருளைப் பெற்றும் தான் அதைக் கைக்கொள்ளாது பிறர்க்குச் சொல்லும் புல்லறிவாளன தானே தனக்குப் பெரிய துன்பத்தைச் செய்து கொள்ளுவான

5. The stupid who does not take due advantage of pretions teachings he may happen to learn but merely passes them on to others does great injury to himself

மிறை எனக் கொண்டு அதற்கு மிடி என்று பரிதியாகும், துன்பம் என்று பிறரும் பொருள் காணபர் சோரும் என்பதனைப் பெயரெச்சமாகக் கொண்டு. அருமறை என்பதற்குப் பெறுதற்கு அரிய உபதேசப் பொருளைப் பெற்றும் என்று பொருள் கொள்ளு பரிமேலழகர் உரையைத் தழுவியது முதலாவது உரை. அருமறை என்பதற்கு அரிதாக எண்ணின மறைபொருள் என்று பொருள் காணபர் மணக்குடவர் அங்ஙனமே காளிங்கர் பரிதியாரும் காளிங்கரும. மணக்குடவர் உரையைத் தழுவியது இரண்டாவது உரை. அவ்வுரை பேணாமை என்னும் பேதைமை யாவதன்றிப் புல்லறிவாண்மையின்மை அறிக என்று மறுத்துரைப்பர் பரிமேலழகர் மறைவெளிப்படுத்தலே புல்லறிவாண்மை ஆகும என்று கொண்டு பரிமேலழகர் மறுப்பை மறுத்துரைக்கும் "உரைவளம்" தொகுப்பாசிரியர் அதற்குக் காட்டும் காரணங்கள் வருமாறு:— இது அரசுறுத அங்கமாவார் மேற்கொள்ளவேண்டிய இயல்பு கூறும் பகுதி; அரசாங்கத்தில் மிக இரகசியமான செய்தியையும் யான அறிவேன் என்று வேண்டுமென்றே பிறர் அறியப் பேசுதல் அவனுடைய பெருமைக்கு ஏதுவாகக் கருதப்படுதல்; அருமறையை உபதேசப் பொருள் எனின் அது அறத்துப்பாலுக்கன்றி ஆட்சி முறை கூறும் அங்கவியலுக்குப் பொருந்தாது; தாம் குருமுகமாகக் கேட்ட உபதேசப் பொருளைத் தாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் எனப் பலரறியப் பரப்புதலே பேரின்பம், எட்டெழுத்து மந்திரத்தை எம்பெருமானார் உபதேசித்த இராமாநுசர் உயர்ந்தார்; பேதைமை அறியாமையை அடிப்படையாகக்கொண்டு மயக்க அறிவால் விளைவது; ஆதலால் மன்னிக்கத் தக்கது; புல்லறிவாண்மை செருக்கால் வேண்டுமென்றே செய்யும் மன்னிக்க முடியாத குற்றம். இறைசெய்தல் என்பதற்குச் சிறப்புச் செய்தல் என்று நாலாவது உரையில் காணப்பட்டுள்ளது.

(வளரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ. இல. M. B 11676

கொக்குவில் மேற்கு. கவிரியேல்ப்பிள்ளை அதிரியாம்பிள்ளை
எதிராக —வழக்காளி

கூளாவடி ஒழுங்கை, 1. மூத்ததம்பி முருகேசுவும்
ஆனைக்கோட்டை 2. மபெண் இராசம்மாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11676ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக்காணி 1972ம் ஆண்டு வைகாசி மாதம் 5ந் திகதி (5—5—72) வெள்ளிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 3870-20 சதமும், 9-5-70 தொடக்கம் 27-10-70 வரைக்கும் ரூபா 3000/-க்கு 10 வீத வட்டியும், அதன்பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 356-20 சதமும். 19-8-71 ல் கட்டப்பட்ட ரூபா 1000/-ம் கழிக்கப்பட வேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோயிற்பற்று ஆனைக்கோட்டை இறை, "முதலயினுர் வளவு ஞானியடைப்பும் மற்றப் பகுதிகளும் கம்பன் சாட்டியும்" (Muthalayinar valavu Gnnaiadaippu and other parcels and Kampanchaddy) விலப்பரப்பு 5 ம் செய்பயிர் வான் பயிரும் பனைகளும். எல்லை கிழக்கு ஒழுங்கையும் முதலாம் எதிரியின் ஆதனமும், வடக்கு கணபதி கந்தையனுக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனமும். மேற்கு வின்சென்ற் பெண் ம சிலாமணியின் ஆதனம், தெற்கு பண்டாரி கதிரவேலுவின் ஆதனம்

செ பாண்டித்துரை

மல்லாகம், கொமிஷனர், விலைமதிப்பாளர்.
1-4 72 Commissioner of Sales & Valuer
எம். 435. 31-3-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ: இல. M B 11709

காரைநகர். காரைநகர் கிழக்கு சிற்றம்பலம் சுப்பிரமணியப் கைம்பெண் அன்னம்மா —வழக்காளி
எதிராக

யாழ்ப்பாணம். பஜார் லேன். No 29
1 வல்லிபுரம் அப்புத்துரையும் பெண்
2 மனோன் ணியும்
யாழ்ப்பாணம். கொட்டடி, புது ரோட்.
3 தம்பிஜயரத்தினம் மகவ கமலராணியும்
4 ஷை தம்பிஜயரத்தினம் பெண் கமலாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 11709-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1972-ம் ஆண்டு வைகாசி மாதம் 26-ந் திகதி (26-5 72) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 5985/- இதில் ரூபா 3000/-க்கும் 23-5-70 தொடக்கம் 9—2—71 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 455/- (செலவழித்த செலவு ரூபா 306-90 வெளியாத்துச் செலவு ரூபா 82/- எதிர்வரும் செலவு ரூபா 66-10 கோட்டுச் செலவில் ரூபா 150/-ம், தீர்வைத் தொகையில் ரூபா 1000/- கொடுபட்ட வகையில் கழிபட வேண்டியது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணுர்பண்ணை தென்மேற்கிறை பிள்ளையான் வளவு (Pillaiyanvalavu) பர. நி. 1 குளிகள் 16¾யும் வீடும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு முத்துக்குமாரு பாலசிங்கத்தினுதனம். இதில யாழ்ப்பாணம் மானிப்பாய் ரோட்டில் நம்பர் 37, 39ம் வரி இலக்கம் கொண்ட கடை அறைகளைக் கொண்ட நிலத்தின் விசாலம் ஏறக்குறைய குளிகள் 3. எல்லை கிழக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் ஆதனமும்; வடக்கு ரோட்டு, மேற்கு புது ஒழுங்கை, தெற்கு முத்துக்குமாரு மகள புனிதவதியினுதனம்;

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, க. சுப்பிரமணியப்
யாழ்ப்பாணம், 16-3-72 கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 432 41—3—72

## எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

யம். டார்வின் கொள்கைப்படி உயிர்களின் தோற்றங்கள் படிப்படியாகச் சிறப்படைந்து வருகின்றன. நமது சமயக் கொள்கைப்படி உயிர்கள் தத்தம் வினைக்கேற்ப அச்சுமாறிப் பிறக்கும். அதாவது தீவினைசெய்த மக்கள் விலங்காயும் பிறக்கக் கூடும்.

இதுபற்றிச் சான்றோக்கிய உபநிடதம் கூறுவது பின்வருமாறு:

எவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட ஞானத்தை அறிந்தவர்களோ, அவர்கள் அரணியத்தில் சிரத்தையையும், தவத்தையும் கைக்கொண்டவர்களோ, அவர்கள் தேவயானம் என்ற ஒளிநிறைந்த மார்க்கத்தை அடைகிறுர்கள்.

ஆனுல் எவர்கள் கிராமத்தில் வசிப்பவர்களாய் இஷ்டிகளையும், பொதுநலன்களையும், தானத்தையும், குறிய முறையில் அநுட்டிப்பவர்களோ, அவர்கள் பித்ருயானம் என்ற ஒளிகுன்றிய மார்க்கத்தை அடைகிறுர்கள்.

இங்கு நல்வழியில் நடந்தவர்கள் எவர்களோ அவர்கள் சந்திரமண்டலத்தினின்று திரும்பிச்சீக்கிரமே நற்பிறப்பை யடைகிறுர்கள், பிராமணர்களாகவோ க்ஷத்திரியர்களாகவோ, வைசியர்களாகவோ தீயவழியில் நடந்தவர்கள் எவர்களோ அவர்கள் சீக்கிரமே தீய பிறப்பை அடைகின்றனர். சண்டாளராகவோ நாயாகவோ, பன்றியாகவோ

அற்பஜந்துக்கள் இவ்விரண்டு மார்க்கங்களிலும் செல்லுபவையல்ல. பன்முறை மீண்டும் மீண்டும் இங்கே பிறப்பதும் இறப்பதுமாகச் சுழல்கின்றன இது மூன்ருவது தானம் ஆகையால் அவ்வுலகு நிரப்பப்பெறுவதில்லை. இவையெல்லாம் ஆலோசித்து ஒருவன் வைராக்கியத்தை அடைய வேண்டும்.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் ஸைவபரிபாலன சபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 31—3—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: 6125/A

தம்பு துரைசாமி நல்லூர், யாழ்ப்பாணம். —வழககாளி
எதிராக
1. ஆறுமுகம் வேலாயுதமும் பெண்
2. சின்னம்மாவும். புத்தூர் மேற்கு. புத்தூர் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் றிககுவெஸ்ற் கேட்டின் 6125/A-ம் இலக்க வழககில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1972-ஆம் ஆண்டு வைகாசி மீ 3-ம் உ (3-5-72) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல வட்டி ரூபா 507/-ம், 19-12-68 தொடககம் 19-6-69 வரைக்கும் ரூபா 300/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுதொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 52-25ம்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்கோவிற்பற்று புத்தூர் இறை 'ஏறந்தலை' கி. பர. 6 எல்லை கிழககு வயிரவன் வேலனுக்கும் பங்காளிகளுக்குமுரியஆதனம். வடககு வட்டன் முருகனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு முருகன் பெண் வயிரவியின் ஆதனம, தெற்கு இலங்கப்பொடியன் பெண் நாச்சியின் ஆதனம். இவையடங்கலுள் சொரியலாய் இரண்டிலொரு (½) பங்கு

Regd: K 193/183

2. ஷை இறை 'ஏறந்தலை' கி. பர. 2ம் பயிர்களும் எல்லை கிழக்கு சிற்றம்பலம சிவசப்புவின் உரிமையாளருக்குரிய ஆதனமும், ஒழுங்கையும, வடக்கு கந்தரன் கைம்பெண் கதிரியின் ஆதனம், மேற்கு கந்தன் கைம்பெண் கதிட்டியின் ஆதனம், தெற்கு இலங்கப்பொடியன் பெண் நாச்சிககும் பங்காளிகளுக்குமுரிய ஆதனம், இவையடங்கலுள் சொரியலாய் நாலில் ஒரு (¼) பங்கு.

Regd K 195/184

J. A. எட்வேட்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை, 27-3-72.
எம 434-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் றிக்குவெஸ்ற் கோட்டில்
வழக்கு இல: 6527/A

1. நாகலிங்கம் கோபாலசங்கம், கோவில் வீதி. நல்லூர், —வழக்காளிகள்
எதிராக
1. வல்லிபுரம் பொன்னுத்துரை அவரது மனைவி
2. பெண கனகம்மா, இல: 115, ஆனந்தன வடலி ரோட் அரியாலை. யாழ்ப்பாணம். —எதிராளிகள்.

மேற்குறித்த 6527/A ஆம் இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும குறித்த கோட்டால் எமக்குக கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன கீழ் விபரிககபபடும் ஆதனத்தை 1972-ம் ஆண்டு சித்திரை மாதம் 21-ம திகதி (21—4—72) வெள்ளிககிழமை முறபகல 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நினறு என்னுல் பிரசித்த ஏலத்தில் விறகப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 300-00ம், 3-2-70 தொடககம் 18 - 7 - 70 வரைக்கும் ரூபா 200/-க்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுதொகைககும் இறுக்கும வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 29 - 25 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவிறபற்று அரியாலை இறை 'காரைமுனங்குவயல' (Karaimunangu Vayal) பர நில. இலா, 15 P. C. இதறகு எல்லை கிழக்கு நாகநாதனின் ஆதனம். வடக்கு அரசாங்கத்துக்குரிய ஆதனம. மேற்கு அரசாங்கத்துக்குரிய ஆதனமும். தம்பையா மகள் நாகமாவுக்குமுரிய ஆதனம். தெற்கு தில்லையர் வல்லிபுரத்துக்குமுரிய ஆதனம,

ப. நா தருமலிங்கம்
167/1 கோவில் வீதி, கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
யாழ்ப்பாணம், 27-3-72 எம். 430 31-3-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M, B. 9655

குஞ்சன் கந்தையா. உரும்பிராய், —வழக்காளி
எதிராக
1. வேலுப்பிள்ளை பொனனுத்துரையும் பெண்
2, பாக்கியமும், தங்கோடை, காரைநகர் மேற்கு, காரைநகர். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9655-ம இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1972ம ஆண்டு சித்திரை மாதம 21-ம திகதி (21—4—72) வெள்ளிக்கிழமை முறபகல 10-30 மணி தொடக்கம அந்தக் காணிக்குள நின்று பிரசித்த ஏலத்தில் விறகபபடும.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2076/-ம் 28-12-67 தொடககம 3-7-69 வரைக்கும் ரூபா 1500க்கு 9 வீத வட்டியும அதன்பின முழுததொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 256/87

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரச்சிப் பகுதி கரச்சி கோவிற்பற்று பெரிய பரந்தன இறை 'பெரிய பரந்தன காடு' ஏககர் 27ம் ரூட் 2ம பேர்ச் 26ம் இதில் உடக்குப பகுமாய முன விற்கப்பட்ட ஏககர் 2½யும தவிர்த்து மிகுதியாயுள்ள ஏக்கர் 25ம் பேர்ச் 26ம் இது அரசாங்க உலாந்தாப் பகுதியால் அளவிடப்பட்ட நம். I. P 8. 8. எனும் படத்தில் முதலாம துண்டு (Lot No 1) இதன் எல்லை கிழக்கு வீதிக்கும் வாய்க்காலுக்குமாய் ஒதுக்கப்பட்ட ஆதனம், வடக்கு இதன் மிகுதிக காணி. மேற்கு P P. A. 1020ம படத்தில் 13ம்துண்டு (Lot 13) ஆனுல் தறபோது வீதி, தெற்கு நம D. O. 1413 இல் கழித்து வைக்கபபட்ட காணி இவையடங்கலும் அதற்குச் சொந்தமானவைகளுடன.

J. A. எட்வேட்
நாரந்தனை தெற்கு, கொமிஷனர் & விலைமதிப்பாளர்
ஊர்காவற்றுறை, 27—3—72. எம். 433 31—3—72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழக்கு இலக்கம்: M B 11940

புத்தூர், நவறகிரி, சுப்பிரமணியம் கைம்பெண் செல்லாச்சி
எதிராக —வழககாளி
மீசாலை. மீசாலைவடக்கு. வேலுப்பிள்ளை கனகசபை—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11940ம இலக்க வழக்கில் எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுககாணி 1972-ம் ஞு வைகாசி மீ 20- ஆந் உ (20-5-72) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2405/- இதில் ரூபா 1500/-க்கும் 21-3-70 தொடககம 2-3-71 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுதொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 265-80 செலவழித்த செலவு ரூபா 173-80 வெளியாத்துச்செலவு ரூபா 55-75 எதிர்வரும் செலவு ரூபா 37-25

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று மீசாலை இறை 'கட்டைபறித்தான்' (Kaddaiparithfhan) பர. நில. (5⅞) ஐந்தே முக்காலும் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் செல்லம்மாவுக்கும் பங்காளருக்கும வடக்கு ஆறுமுகம் வல்லிபுரத்துக்கும் சின்னப்பிள்ளை கார்த்திகேசு மகள் சுலோசனாதேவிக்குமுரிய ஆதனம் மேற்கும் தெற்கும் கனகசபை பெண் லீலாவதிக்குமுரிய ஆதனம் இதடங்கலும் F 364/214ல் பதியப்பட்டிருக்கிறது.

க. சுப்பிரமணியம்
நம்: 24, 1-ம் குறுக்குத் தெரு, கொமிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம், 8-3-72 M. 431 31-3-72